(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 104.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2016 ஒக்தோபர் 04, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

389/ '15

1.

கௌரவ புத்திக்க பதிரண,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இஞ்சிச் செய்கைக்கு பூஞ்சண நோய் தொற்றியுள்ளதென்பதையும்;

(ii) இதனால் களுத்துறை மாவட்டம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் இஞ்சிச் செய்கைக்கு சேதம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) தற்போது இஞ்சி விலை மிக கீழ் மட்டத்தில் இருக்கின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பூஞ்சணத்தினாலான சேதத்தை தடுப்பதற்கு கமத்தொழில் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2015 ஆம் ஆண்டில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இஞ்சியின் அளவு எத்தனை கிலோகிராம் என்பதையும்;

(ii) நாட்டுக்குத் தேவையான இஞ்சியின் அளவை நாட்டினுள் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இஞ்சி இறக்குமதியை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) (i) இஞ்சி விலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அது எவ்வாறு என்பதையும்;

(iii) இஞ்சிச் செய்கையை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் வேறு வழிமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

572/ '16

2.

கௌரவ செயிட் அலி சாஹிர் மௌலானா,— பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சம்மாந்துறை, அம்பாறை வீதி, போடியார் தெரு, இலக்கம் 438 இல் வதியும் திரு. கே.எல். பஸ்லி நிசாரின் வலதுகுறை நிலை ஓய்வூதிய (ஓ.இல. 01-857916) விண்ணப்பமும் அதனுடன் தொடர்புடைய சுகாதாரம் 307 அறிக்கையும் தொடர்பில் (வலதுகுறை நிலைக்கு ஆளான உண்மையான திகதியான 2006.04.18 ஆம் திகதியைக் குறிப்பிட்டு) DSS/FMG/PEN/DI/2013-2 ஆம் இலக்க மற்றும் 2013.12.19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சம்மாந்துறை பிரதேச செயலாளரினால் ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் தலைமை அதிபதி அறிவுறுத்தப்பட்டுள்ளாரென்பதையும்;

(ii) ஆமெனில் இவரின் ஓய்வூதியத்தை விரைவில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

595/ '16

3.

கௌரவ லக்கி ஜயவர்தன,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் நிதிக் கம்பனிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கம்பனிகள் மற்றும் அவை அமைந்துள்ள இடங்கள் யாவை;

(iii) ஒருசில நிதிக் கம்பனிகள் வாடிக்கையாளர்களுக்கு சிரமமேற்படுகின்ற விதத்தில் செயலாற்றுகின்றன என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அக்கம்பெனிகளின் செயற்பாடுகள் காரணமாக சிரமங்களுக்கு இலக்காகிய வாடிக்கையாளர்கள் மேற்படி கம்பனிகளுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனரென்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்களைக் குறைப்பதற்காக நிதி நிறுவனங்களை ஒழுங்குமுறையாக்க முறைசார்ந்த வழிமுறையொன்றை வகுப்பாரா;

(iii) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

610/ '16

4.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புற்று நோயாளர்களுக்கு வழங்கப்படும் NIMOTUZUMAB எனும் மருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள தடவைகள் எத்தனை;

(ii) இம்மருந்து இறக்குமதி செய்யப்பட்ட திகதிகள் யாவை;

(iii) ஒவ்வொரு தடவையிலும் இறக்குமதி செய்யப்பட்ட மருந்தின் அளவு, அதற்கென செலவு செய்யப்பட்ட பணத்தொகை மற்றும் இறக்குமதி செய்த கம்பனி வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இம்மருந்தை இறக்குமதி செய்வதற்கு தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையிடம் அல்லது வெறேதேனும் நிறுவனத்தில் குறிப்பிட்ட கம்பனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அத் திகதிகள் யாவை;

(iii) மேற்படி மருந்து இன்னமும் பரீட்சார்த்த மட்டத்தில் இருக்கின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

622/ ‘16

5.

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஊவா மாகாணத்தின் முதலமைச்சர் மாகாணசபை கணக்கொன்றை தனது சொந்த பாவனைக்காக கையேற்றுள்ளமையை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) இருப்பிலுள்ள நிதி ஒழுங்குவிதிகளுக்கும் மாகாணசபை விதிகளுக்கும் அது எந்தளவிற்கு இணங்குகின்றதென்பதையும்;

(iii) எதேனும் சட்டவிரோத அல்லது முறைகேடான கொடுக்கல் வாங்கல் நடந்திருப்பின், அது சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கையை இச்சபைக்கு அறிவிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

628/ ’16

6.

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2001 - 2004 காலப் பகுதியில் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் விற்பனை அல்லது நீண்டகால குத்தகை அடிப்படையில் தனியார் கம்பனிகளுக்கு அல்லது ஆட்களுக்கு வழங்கப்பட்ட அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி தோட்டங்களின் பெயர்கள், அவற்றின் ஏக்கர்களின் அளவு, விற்பனை செய்யப்பட்ட அல்லது குத்தகைக்கு வழங்கப்பட்ட பணத்தொகை, விற்பனை அல்லது குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட கம்பனிகள் அல்லது ஆட்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி தோட்டங்கள் அமைச்சரவை அங்கீகாரம், திறந்த கேள்விபத்திர நடைமுறை அல்லது அரச விலை மதிப்பீட்டின் கீழ் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறான எவ்வித நிபந்தனைகளுமின்றி மேற்படி காணிகள் விற்பனை செய்யப்பட்டு அல்லது குத்தகைக்கு விடப்பட்டு இருக்குமாயின், மேற்படி காணிகளை மீள அரசு சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

635/ ’16

7.

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்குவதாக கடந்த தேர்தல் சமயத்தில் அளித்த வாக்குறுதிக்கிணங்க மேற்படி முரண்பாடு நீக்கப்பட்டுள்ளதா;

(ii) ஓய்வூதிய முரண்பாடுகளை சரிசெய்து செலுத்தும்வரை ஒரே தடவையில் 2 மாதங்களுக்காக செலுத்தப்பட்ட கொடுப்பனவு பின்னர் மீள அறவிடப்பட்டுள்ளதா;

(iii) ஓய்வூதியம் செலுத்துகையில் அச்சம்பளத்தில் விதவைகளுக்கு செலுத்திய பணத்தொகை கழிக்கப்பட்டுள்ளதா;

(iv) முன்பு ஓய்வூதியம் செலுத்துகையில் 21 வயதுக்கு குறைந்த விவாகம் செய்யாத பெண் பிள்ளைகளுக்கும் 18 வயதுக்கு குறைந்த பிள்ளைகளுக்கும் இருந்த ஓய்வூதிய உரித்துரிமை இன்றளவில் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

642/ ’16

8.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டத்தை அல்லது சட்டத்தின் எண்ணக்கருப் பத்திரமொன்றை வரைவு செய்வதற்காக எவரேனும் சில ஆட்களுக்கு கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) கொடுப்பனவைப் பெற்ற ஆட்களின் பெயர்கள், கொடுப்பனவு செலுத்தப்பட்டதற்கான காரணங்கள் மற்றும் ஒவ்வவொருக்கும் செலுத்தப்பட்ட தொகை தனித்தனியாக யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

650/ ’16

9.

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.10.01 முதல் 2016.03.30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட நடைமுறை யாது என்பதையும்;

(iv) இவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியில் வெற்றிடங்கள் காணப்பட்டனவா என்பதையும்;

(v) ஆமெனில், காணப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) ஒவ்வொருவரும் தெரிவு செய்யப்பட்ட அளவுகோல்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

658/ ’16

10.

கௌரவ எம்.எச் எம். சல்மான்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் திருமண மற்றும் மணநீக்கச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படுகின்ற காதி நீதிபதிகளுக்கு வழங்கப்படுகின்ற ரூபா 6,000/- மாதாந்தக் கொடுப்பனவு மற்றும் எழுதுனர் கொடுப்பனவு உள்ளிட்ட அலுவலக வசதிகளுக்காக வழங்கப்படுகின்ற ரூபா 5,000/- கொடுப்பனவு எவ்விதத்திலும் போதுமானதாக இல்லை என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) தற்போதைய வாழ்க்கைத்தரம் மற்றும் செலவுகளை கருத்திற்கொண்டு அக்கொடுப்பனவை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

664/ ’ 16

11.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காங்கேசன்துறை துறைமுகத்தை நவீனமயப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம், இந்திய அரசாங்கத்துடன் அல்லது இந்திய கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்றை அல்லது இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக் கொண்டுள்ளதா;

(ii) ஆமெனில், அவ்வுடன்படிக்கையை அல்லது இணக்கப்பாட்டை இச்சபையில் சமர்ப்பிப்பாரா;

(iii) இவ்வுடன்படிக்கைக்கான அல்லது இணக்கப்பாட்டுக்கான அமைச்சரவையினதும் சட்ட மாஅதிபர் திணைக்களத்தினதும் அங்கீகாரம் மற்றும் அவதானிப்புக்கள் அடங்கிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பாரா;

(iv) அவ்வொப்பந்தம் உரிய கம்பனிக்கு வழங்கப்பட்டது திறந்த கேள்விப்பத்திர நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டதன் மூலமா;

(v) ஒப்பந்தத்தின்படி துறைமுகத்தை நவீனமயப்படுத்துவதற்காக ஏற்க நேரிடும் பணத்தொகை எவ்வளவு;

(vi) நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

701/ ’16

12.

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம், இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவை பலப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட மூலதன நிதி ஏற்பாடு எவ்வளவென்பதையும்;

(ii) 2016.03.01 ஆம் திகதிக்கு பின்னர், மேற்படி ஆணைக்குழுவினால் மூலதன நிதி ஏற்பாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்ட விதம் யாதென்பதையும்;

(iii) ரூபா 123 மில்லியன் மூலதன நிதி ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, 2016 ஆம் ஆண்டுக்காக மேலதிக மூலதன நிதி ஏற்பாடுகளுக்கான வேண்டுகோள் நிதி அமைச்சுக்கு கிடைத்துள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி மேலதிக நிதி ஏற்பாடுகள் கோரப்படுவதன் நோக்கம் யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

709/ '16

13\.
கௌரவ எஸ். வியாழேந்திரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட 100 நாள் வேலைத்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இன்று வரை கல்வி அமைச்சில் சிற்றூழியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நியமனங்கள் வழங்கப்படுகையில் பரிசீலிக்கப்பட்ட தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறு எத்தனை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மேற்படி நியமனங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள தமிழ் சிற்றூழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

710/ '16

14\.
கௌரவ பிரசன்ன ரணதுங்க,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.08 ஆம் திகதியளவில் சமுர்த்தி உதவியைப் பெற்றுக்கொண்ட பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி சமுர்த்தி பயனாளிகளுக்கு உதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2016.04.30 ஆம் திகதியளவில் சமுர்த்தி உதவியைப் பெற்றுக்கொண்ட பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி சமுர்த்தி பயனாளிகளுக்கு உதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் செலவிட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

711/ '16

15\.
கௌரவ ஆனந்த அளுத்கமகே,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆம் ஆண்டில் கங்க இஹல பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தின், கிராஉல்ல பிரிவில் விவசாய ஊக்குவிப்பாளராக கடமையாற்றும் உபாலி குமார கித்சிறி என்பவர் மோசடியான முறையில் அரசாங்க பணத்தை பயன்படுத்தி தமது சொந்த வீட்டுக்கு வீதியொன்றை நிர்மாணித்துள்ளார் என்பதையும்;

(ii) மேற்படி வீதி கங்க இஹல கோரலே பிரதேச சபைக்கு உரித்தானதல்ல என்பதையும்;

(iii) அனுமதியின்றியும் பலவந்தமாகவும் கிராஉல்ல விகாரைக்கு சொந்தமான வயல் காணியை நிரப்பி நிர்மாணிக்கப்பட்டதென்பதையும்;

(iv) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கு அரசாங்க பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(v) தனிப்பட்ட வீதியொன்றுக்கு அரசாங்க பணத்தை செலுத்துவதற்கும் அனுமதியின்றி வயல் காணியை நிரப்புவதற்கும் அரசியல் அதிகாரம் பயன்படுத்தபட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி விடயம் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது
## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நிதி அமைச்சர்,— சேர்பெறுமதி வரி (திருத்தம்),— 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

சட்ட ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் 13 ஆம் திகதிய 1971/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் 13 ஆம் திகதிய 1971/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் 28 ஆம் திகதிய 1973/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூலை 12 ஆம் திகதிய 1975/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரும் காணி அமைச்சரும்,— காணி கொள்ளுதல் சட்டத்தின் கீழ் கட்டளை,— (460 ஆம் அத்தியாயமான) காணி கொள்ளுதல் சட்டத்தின் 63 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஊ) ஆம் அத்தியாயத்தின் 2013 காணி கொள்ளல் சட்டத்தின் (நட்டஈடு செலுத்துதல்) ஒழுங்குவிதிகளின் திருத்தம் தொடர்பில் காணி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூலை 26 ஆம் திகதிய 1977/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

இலங்கைப் பொறியியற் பேரவை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

மருத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி ( திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 36 ஆம் பிரிவு (2) ஆம் உப பிரிவின் (ஈ) மற்றும் (உ) பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் மாதம் 15 ஆம் திகதிய 1971/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.20ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) ஆம் உப பிரிவின் (ஔ), (க) மற்றும் ( த) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 செப்டெம்பர் 01 ஆம் திகதிய 1878/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 17.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 செப்டெம்பர் 01 ஆம் திகதிய 1878/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 18.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 திசெம்பர் 12 ஆம் திகதிய 1892/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 19.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ஏ) பிரிவின் கீழ் உள்நாட்டலுவல்கள், கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 03 ஆம் திகதிய 1904/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 20.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (த எ), (த ஏ) மற்றும் (ந) பிரிவுகளின் கீழ் கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 26 ஆம் திகதிய 1907/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 21.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 6) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ஔ) மற்றும் (ந) பிரிவுகளின் கீழ் கடற்றொழில் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 மார்ச் 26 ஆம் திகதிய 1907/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 22.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 7) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 30 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 யூலை 20 ஆம் திகதிய 1924/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 23.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 8) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 1938/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 24.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 9) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 ஒக்தோபர் 26 ஆம் திகதிய 1938/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 25.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 10) ,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 14அ, 14ஆ, 14இ, 14ஈ, 14உ, 14ஊ, 14எ, 14ஏ, 14ஐ, 14ஒ, 14ஓ 14ஔ, 14க மற்றும் 14ங பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 திசெம்பர் 14 ஆம் திகதிய 1945/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 26.

கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல. 11 ) , — 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 61 (1) (ந) பிரிவின் கீழ் கடற்றொழில், நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 14 ஆம் திகதிய 1945/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 27.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 28.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

29.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.